# ஆகஸ்ட் 31 - புனித ரேமுந்து (1200-1240)

இவரை "பிறவாத ரேமுந்து" என்பார்கள். ஏனெனில் இறந்த தாயின் உதரத்தில் இருந்து இவர் எடுக்கப்பட்டார். இவர் பக்தி உள்ளவர். "தாயே, என்னை உம்முடைய பிள்ளையாய் ஏற்றுக்கொள்ளும்" என்று இவர் அடிக்கடி தேவதாயை நோக்கிக் கூறுவார். அடிமைகளை மீட்பதற்காக தொடங்கப்பட்டிருந்த சபையில் இவர் சேர ஆசித்தார். தந்தை இதை விரும்பவில்லை. இறுதியாக அனுமதி கிடைத்தது. வார்த்தைப்பாடு கொடுத்து இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பின் இவரை ஆப்பிரிக்காவில் உள்ள தூனிஸ் நகருக்கு அனுப்பினார். இவர் பெரும் பணத்தொகையுடன் போனார். அநதப் பணத்தைக் கொண்டு அநேக அடிமைகளை மீட்டார். பணம் செலவானதும், வேறு பல அடிமைகளை மீட்கும்படி, சபையின் விருப்பப்படி தம்மையே மீட்புக் கிரயமாகக் கொடுத்தார்.

மகமதியரிடம் இவர் அடிமையாக இருந்த காலத்தில் கிறிஸ்தவர்களைத் தேற்றுவார். ஊக்குவிப்பார். சில அவிசுவாசிகளை மனந்திருப்பினார். இதற்காக இவரைச் சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள். என்றாலும் இவரைக் கொல்லவில்லை. ஏனெனில் இவர் சில அடிமைகளின் மீட்புக் கிரயமாக தம்மைக் கையளித்தார். இவரைக் கொன்றால் பெருந்தொகையான பணம் கிடைக்காமல் போகும்.

எட்டு மாதங்களாக இவர் விலங்கிடப்பட்டு இருட்டறையில் கிடத்தப்பட்டார். கடைசியாக இவருடைய சபை சகோதரர்கள் பெருந்தொகை கொடுத்து இவரை மீட்டார்கள்.பாப்பானவர் இவரை கர்தினால் ஆக்கினார். இந்தப் பதவியிலும் இவர் ஏழையாகவே வாழ்ந்தார்.




**சிந்தனை:**

நமக்கும் மீட்பு தேவை. ஏனெனில் நாம் உலகத்துக்கும், உடலுக்கும் பசாசுக்கும் அடிமைகளாக இருக்கலாம். இரட்சகரது வரங்களை செபத்தினாலும் தேவ அருட்சாதனங்களாலும் பெற்று கடவுளுடைய பிள்ளைகளுக்குரிய சுதந்திரத்தை அடைவோமாக.

**செபம்:**

மரியாயே, என் மாதாவே, நான் பாவத்தில் விழாமல் என்னைக் காப்பாற்றும்.